**CIABOC இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை**

**மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு**

**இடம்: கிங்ஸ்பெரி ஹோட்டல்,**

**10 வது மாடி,**

**விக்டோரியன்,**

**திகதி : 20 டிசம்பர் 2017.**

**நேரம்: மு.ப 9.00 - மு.ப 10.30**

**அறிமுகம்: இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவானது இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிராக உருவாக்கப்பட்ட பிரதான அமைப்பாகும்.**

**CIABOC இன் பிரதான செயற்பாடுகள்**



**எமது புதிய இணையத்தளம்** : www.ciaboc.gov.lk

www.ciaboc.gov.lk

**உத்தியோகபூர்வ இணையத்தள அங்குராற்பன நிகழ்வினூடே பணிப்பாளர் நாயகம் திரு. சரத் ஜயமான்னசனாதிபதி சட்டத்தரணி அவர்களினால் இணையத்தளத்தில் உள்ளடங்கப் பெற்றுள்ள அம்சங்களின் முக்கியத்துவம் மற்றும் சிறப்பம்சங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.**

**இணையத்தளத்தில் உள்ளடங்கப் பெற்றுள்ள சிறப்பம்சங்கள்**

குறிப்பிடத்தக்க விஷேட அம்சம் யாதெனில் இலங்கையின் அரச நிறுவனங்களின் இணையத்தளங்களில் இதுவரைக்காலத்திலும் இடம் பெற்றிராத பல்வேறு விஷேட அம்சங்கள் உள்ளடங்கப்பெற்றதாய் இணையத்தளம் வெளிவருகின்றமையாகும்.

குறிப்பாக பல்வேறு விதத்திலும் வித்தியாசமான இயலுமையுடைய தரப்பினரின் தேவைகளையும் கருத்திற் கொண்டு (கண்பார்வை இழந்தோர் குரல் மூலம் தகவல் வழங்க, செவிப்புலம் மூலம் தகவல் பெற, நிறமாற்றம் செய்து விசாலமாக்கி பார்வையிடக் கூடியதாய்) சகல தரப்பினருக்கும் வினைத்திறன்மிக்க முறையில் பயன்படுத்தக்க வகையில் பல்வேறு சிறப்பு வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வேறுபட்ட 8 விதமான வழிகளின் மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவிற்கு எச்சந்தர்ப்பத்திலும் முறைப்பாடு செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

- நேரடியாக

- எழுத்து மூலம்
- துரித தொலைபேசி அழைப்பு
- கையடக்க தொலைபேசி
- குறுஞ்செய்தி
- தொலை நகல்
- மின்னஞ்சல்
- ஒன்லைன்

ஒன்லைன் மூலம் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு உரிய முறைப்பாட்டுப் படிவங்கள் எமது இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இணையத்தளமானது ஊஐயுடீழுஊ இனால் அடையப்பெற்ற குற்றத்தீர்ப்புக்கள் தொடர்பான விபரங்களையும், விசாரணைகளுடன் தொடர்புடைய தகவல்களையும் உள்ளடக்கிய பக்கங்களையுடையது. (பிரிவு 17 இரகசியம் பேணும் ஷரத்திற்கு அமைவாக)

அத்துடன் இது சமூகப்பிரிவுகள் எனும் பக்கத்தினை கொண்டிருப்பதுடன் அதனூடாக சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் எனும் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக காணப்படுவதுடன் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகுத்துள்ளது.

**ஊடக சந்திப்பு**

ஆரம்பத்தில் CIABOC இன் பணிப்பாளர் நாயகம் அவர்கள் ஆணைக்குழுவின் பணிகள் புலனாய்வுகள், ஆணைக்குழு சட்டத்தின் 17 ஆம் பிரிவான இரகசியம் பேணும் பிரிவு, தடுப்பு நிவாரணம் மற்றும் பல்வேறு அம்சங்கள் தொடர்பில் தன்னுடைய சுருக்கமான முன்வைப்பினூடே விளக்கமளித்தார்.

பணிப்பாளர் நாயகம் அவர்கள் ஆணைக்குழுவானது இலஞ்ச சட்டம் மற்றும் ஆணைக்குழுச்சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கான பிரேரிப்புக்களை முன்வைத்துள்ளதுடன் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஆணைக்குழுவானது அடுத்த வருடத்தில் 50 நிபுணத்துவ புலனாய்வாளர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஊடக சந்திப்பில் வினவப்பட்ட வினாக்களும் பதில்களும்

வினா- பொறுப்பு வாய்ந்த அமைப்பு என்ற வகையில் நேர்மைத்திறனை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?

பணிப்பாளர் நாயகம்: இது மிக முக்கியமான வினாவாகும். ஏனைய நாடுகளில் அலுவலர்கள் ஊழல் தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றனர். நேர்மைத்திறன் எண்ணக்கருவானது பாடசாலை சிறுவர்கள மத்தியிலிருந்தே ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஆணையாளர் III**

அனேகமான அரசாங்க அலுவலர்கள் ஊழலை மேற்கொள்வதற்கு காரணம் அவர்களின் உள்ளம் தூய்மையின்மையாகும். எமது தடுப்பு நிவாரண செயற்றிட்டத்தின் பிரதான இலக்கு அரசாங்க அலுவலர்கள் மத்தியில் நேர்மைத்திறனைக் கட்டியெழுப்புவதாகும். அதற்கு அப்பால் பாடசாலைகளில் நேர்மைக்குழுக்களை உருவாக்கி அதனூடாக மாணவர்களிடத்தில் நேர்மைத்திறனைக் கட்டியெழுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தாமைக்குரிய தண்டப்பணமாக குற்றவாளியால் ரூபா 1000.00 காணப்படுகின்றமை தொடர்பில் ஒரு ஊடகவியலாளர் ஒருவரினால் வினவப்பட்டது.

பணிப்பாளர் நாயகம் அவர்கள் பதிலளிக்கையில், சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் குறித்த சட்டமானது 1975 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாகும். ஆதுவே இதுவரையும் பிரயோகிக்கப்படுகின்றது. இதனை தற்காலத்திற்கு ஏற்றாற் போல் திருத்தம் செய்வதற்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கலந்துரையாடலுக்கு அப்பால் ஆணையாளர் ஐஐஐ அவர்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை பிராந்திய ரீதியில் விஸ்தரிப்பதற்கான ஆலோசணைகளும் முன்வைக்கப்பட்டு வருவதாக கருத்துத் தெரிவித்தார்.

CIABOCஆனது தற்போது கொழும்பில் மாத்திரமே செயற்படுகின்றது. இந்நிலைமை காரணமாக வெளிப்பிரதேச மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதில் அசிரத்தை காட்டுகின்றனர். ஆதலினால் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் கண்டி, மாத்தறை மற்றும் அனுராதபுரம் முதலான இடங்களில் பிராந்திய நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஆலோசணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.